- 21 *மீ நீளமும் 24 மீ அகலமும் கொண்ட புல்வெளியின் நான்கு மூலைகளிலும் 7 மீ நீளமுள்ள கயிற்றால் நான்கு குதிரைகள் கட்டப்பட்டுள்ளன் எனில் குதிரைகள் மேயும் அதிகபட்ச பரப்பு, குதிரகள் மேயாத பகுதியின் பரப்பு காண்*

  
  

  *ஒரு குதிரை மேயும் அதிக பட்ச பரப்பு = 7 மீ ஆரமுள்ள கால் வட்டம்*

  *4 குதிரைகள் மேயும் அதிகபட்ச பரப்பு = 7 மீ ஆரமுள்ள வட்டத்தின் பரப்பு*

  $$= \frac{22}{7} \times 7 \times 7 = 154\ m^2$$

  *குதிரை மேயாத பகுதி = செவ்வகத்தின் பரப்பு – மேய்ந்த பரப்பு*

  $$= (24 \times 21) - 154 = 504 - 154 = 350 \text{ ச.மீ}$$

- *2 செ.மீ நீளமுள்ள மூன்று நாணயங்கள் ஒன்றையொன்று தொடுமாறு வைக்கப்பட்டால் அவற்றால் அடைபடும் பகுதியின் பரப்பு காண்*

  *நிழலிடப்பட்ட பகுதியின் பரப்பு = சமபக்க முக்கோணம் ABC ன் பரப்பு – 3 வட்டகோணப்பகுதியின் பரப்பு*

  A C B

  $$= \frac{\sqrt{3}}{4} a^2 - 3\left(\frac{\theta}{360} \pi r^2\right)$$

  $$= \frac{\sqrt{3}}{4} \times 2^2 - 3\left(\frac{60}{360} \times \frac{22}{7} \times 1 \times 1\right)$$

  $$= \sqrt{3} - \frac{11}{7}$$

  $$= 1.732 - 1.572 = 0.16$$

## வாழ்வியல் கணிதம்

### தனி வட்டி

அசலுக்கு மட்டும் வட்டி காணுதல் தனிவட்டி .

R.SIVA M.Sc.,B.Ed.,8015118094

- தனி வட்டி = $\frac{pnr}{100}$

$p$ அசல்

$n$ காலம்(ஆண்டுகளில்)

$r$ வட்டி வீதம்

கூடுதல் தொகை = அசல் + வட்டி

- 365 நாட்கள் = 1 ஆண்டு
- 219 நாட்கள் = $\frac{219}{365} = \frac{3}{5}$ ஆண்டு
- 73 நாட்கள் = $\frac{73}{365} = \frac{1}{5}$ ஆண்டு
- 12 மாதங்கள் = 1 ஆண்டு
- 6 மாதங்கள் = $\frac{6}{12} = \frac{1}{2}$ ஆண்டு
- 3 மாதங்கள் = $\frac{3}{12} = \frac{1}{4}$ ஆண்டு

**கூட்டு வட்டி**

ஒவ்வொரு முறை பெற்ற வட்டியையும் அசலுடன் சேர்த்து வட்டி காணுதலை கூட்டு வட்டி என்கிறோம் .

- கூட்டுவட்டி முறையில் கூடுதல் தொகை $A = P\left(1 + \frac{r}{100}\right)^n$
- கூட்டுவட்டி = கூடுதல் தொகை – அசல்
- அரையாண்டுக்கு கூட்டு வட்டி காணும் முறையில் $A = P\left[1 + \frac{1}{2}\left(\frac{r}{100}\right)\right]^{2n}$
- காலாண்டுக்கு கூட்டு வட்டி காணும் முறையில் $A = P\left[1 + \frac{1}{4}\left(\frac{r}{100}\right)\right]^{4n}$
- அசல் P க்கு வட்டி வீதம் $r$% எனில் இரண்டு ஆண்டுகளுக்கு கூட்டு வட்டிக்கும் தனி வட்டிக்கும் உள்ள வித்தியாசம் $P\left(\frac{r}{100}\right)^2$

**தொடர் வைப்புத்திட்டம்**

தொடர் வைப்புத்திட்டத்தில் வட்டி = $\frac{pn(n+1)r}{2\times12\times100}$

- தொடர் வைப்பு திட்டத்தில் $\mathbf{A} = \boldsymbol{p\,n + I}$
  - $p$ அசல்
  - $n$ காலம்(மாதங்களில்)
  - $r$ வட்டி வீதம்

**காலம் மற்றும் வேலை**

A இன் ஒரு நாள் வேலை = $\frac{1}{\text{அவ்வேலையை முடிக்க } A \text{ எடுத்துக்கொள்ளும் காலம்}}$

A ஒரு வேலையை n நாட்களில் முடிப்பர் எனில் A இன் ஒரு நாள் வேலை $\frac{1}{n}$

RSIVA M.Sc.,B.Ed., 8015118094

TNPSC MATHS. R.SIVA M.Sc.,B.Ed., Cell : 8015118094 mail id : sivatvmalai@yahoo.co.in

## மதிப்பு கூடுதல்

மக்கள் தொகை , பாக்டீரியாவின் வளர்ச்சி , சொத்தின் மதிப்பு ,விலை கூடுதலாக உள்ள சில பொருட்கள் இவை அனைத்திற்கும் ஆண்டுதோறும் மதிப்புகள் கூடுகின்றன இதைக்காண $A = P\left(1 + \frac{r}{100}\right)^n$ என்ற சூத்திரத்தைப் பயன்படுத்த வேண்டும்

## மதிப்பு குறைதல்

சில இயந்திரங்களின் மதிப்பு , வண்டிகளின் மதிப்பு , சில பொருட்களின் விலைகள் , கட்டிடங்களின் மதிப்பு ஆகியவை ஆண்டுதோறும் குறைகின்றன

இதைக்காண $A = P\left(1 - \frac{r}{100}\right)^n$ என்ற சூத்திரத்தைப் பயன்படுத்த வேண்டும்

## விகிதம்

- விகிதம் என்பது ஒரே அலகினை உடைய இரு அளவுகளை ஒப்பிடுவது ஆகும்
- a : b என்பதும் b:a என்பதும் வெவ்வேறு
- a:b என்ற விகிதத்தில் உள்ள உறுப்புகள் ஒரே எண்ணின் மடங்குகளால் பெருக்கும்போது சமான விகிதங்கள் கிடைக்கும்
- 5 : 7 என்ற விகிதத்தின் ஏதேனும் ஐந்து சமான விகிதங்களை எழுதுக

தீர்வு

விகித வடிவம் 5 : 7

பின்ன வடிவம் $\frac{5}{7}$

பகுதி தொகுதிகளை ஒரே எண்ணால் பெருக்க ( 2,3,4,5,6 ) சமான பின்னங்கள் கிடைக்கும்

$\frac{5}{7}$ ஐ 2 ஆல் பெருக்க $\frac{10}{14}$

$\frac{5}{7}$ ஐ 3 ஆல் பெருக்க $\frac{15}{21}$

$\frac{5}{7}$ ஐ 4 ஆல் பெருக்க $\frac{20}{28}$

$\frac{5}{7}$ ஐ 5 ஆல் பெருக்க $\frac{25}{35}$

$\frac{5}{7}$ ஐ 6 ஆல் பெருக்க $\frac{30}{42}$

5 : 7 ன் சமான விகிதங்கள் 10 : 14 , 15 : 21 , 20 : 28 , 25 : 35 , 30 : 42

இரு விகிதங்களின் எளிய வடிவம் சமமாக இருக்கும் எனில் அவ்விகிதங்கள் விகித சமம் ஆகும்

a:b :: c:d எனில் a x d = b x c ( நடு எண்களின் பெருக்கல்=கடை எண்களின் பெருக்கல் )

12 : 9 , 4 : 3 என்ற எண்கள் விகித சமம் எனக் காட்டுக

R.SIVA M.Sc.,B.Ed ., 8015118094

தீர்வு

முதல் மற்றும் இறுதியில் உள்ள எண்களின் பெருக்குத்தொகை 12 x 3 = 36

நடுவில் உள்ள எண்களின் பெருக்குத்தொகை 9 x 4 =36

இரண்டும் சமம்

எனவே 12 : 9 , 4 : 3 என்ற எண்கள் விகித சமம்

---

3 : 4 = 12 : ----- எனில் விடுபட்ட எண்ணைக் காண்க

தீர்வு

முதல் மற்றும் இறுதியில் உள்ள எண்களின் பெருக்குத்தொகை = நடுவில் உள்ள எண்களின் பெருக்குத்தொகை

3 x விடுபட்ட எண் = 4 x 12

3 x விடுபட்ட எண் = 48

விடுபட்ட எண் = $\frac{48}{3}$ = 16

---

- இரண்டு உறுப்புகள் ஒரே விகிதத்தில் தொடர்ந்து மாறினால் அது நேர் விகிதம்

- 4 ஆட்கள் ஒரு வேலையை 2 நாட்களில் செய்கிறார்கள் . அதே வேலையை 2 ஆட்கள் செய்து முடிக்க ஆகும் நாட்கள்

  | ஆட்கள் | | நாட்கள் | |
  |---|---|---|---|
  | 4 | ↑ | 2 | ↓ |
  | 2 | | $x$ | |

  2 : 4 = 2 : $x$

  2$x$ = 8 நடு உறுப்புகளின் எண்ணிக்கை = இறுதி உறுப்புகளின் எண்ணிக்கை

  $x$ = 4

  விடை 4 நாட்கள்

- 5000 க்கு 5 % ஆண்டு வட்டி வீதத்தில் 2 ஆண்டுகளுக்கு தனி வட்டி

  தனிவட்டி = $\frac{\text{pnr}}{100} = \frac{5000 \text{ x } 2 \text{ x } 5}{100}$ = 50 X 2 X 5 = 500

- வேகம் அதிகரிக்கும் போது நேரம் குறையும் இது எதிர் மாறல்
- 8 மனிதர்கள் ஒரு வேலையை 6 நாட்களில் செய்து முடிப்பார்கள் . அதே வேலையை 12 ஆட்கள் எத்தனை நாட்களில் செய்வார்கள்

  | ஆட்கள் | நாட்கள் |
  |---|---|
  | 8 | 6 |
  | 12 | x |

  8 : 12 = $x$ : 6

  12$x$ = 8 × 6

  $x$ = 48 / 12 = 4 நாட்கள்

R.SIVA M.Sc.,B.Ed ., 8015118094

- ஒரு தரகர் ஒரு சிற்றுந்தை ரூ 50,000 க்கு விற்கிறார். தரகு வீதம் 2 % எனில் அவர் பெற்ற தரகுத்தொகை எவ்வளவு

  50000 ல் 2 % = ( 50000 X 2 ) / 100 = 500 X 2 = 1000

- 1200 குறித்த விலையுள்ள மிதி வண்டி ரூ 1100 க்கு விற்கப்பட்டால் தள்ளுபடி சதவீதம் என்ன ?

  தள்ளுபடி = 1200 – 1100 = 100

  1200 க்கு தள்ளுபடி = 100

  100 க்கு தள்ளுபடி = $\frac{100 \times 100}{1200}$ = 8.33 %

- எத்தனை ஆண்டுகளில் 5 % வட்டி வீதத்தில் ரூ 5000 ஆனது ரூ 6000 ஆக மாறும்

  வட்டி = 6000 – 5000 = 1000

  வட்டி = $\frac{pnr}{100}$

  1000 = $\frac{5000 \times n \times 5}{100}$

  1000 = $50 \times n \times 5$

  $1000 = 250\,n$

  $n = 4$

- பிரேமா ரூ 100 ஐ மாதாந்திர தவணையாக 6 % வட்டி வீதத்தில் 5 ஆண்டுகளுக்கு செலுத்தினால் 5 ஆண்டு முடிவில் அவர் பெறும் வட்டித் தொகை யாது

  p = 100 n = 5 ஆண்டுகள் = 5×12 = 60 மாதங்கள்

  வட்டி = $\frac{p \times n \times (n+1) \times r}{2 \times 12 \times 100} = \frac{100 \times 60 \times 61 \times 6}{2 \times 12 \times 100}$ = 915

- ஒரு தொகை கூட்டு வட்டியில் 3 ஆண்டுகளில் 3 மடங்காக அதிகரித்தால் 9 மடங்காக எத்தனை ஆண்டுகள் ஆகும்

  தொகை $x$ எனில் 3 ஆண்டுகளில் 3 $x$

  அடுத்த 3 ஆண்டுகளில் 3 $x$ தொகையானது 3 (3 $x$ ) = 9$x$ ஆக மாறும்

  எனவே 6 ஆண்டுகளில் 9 மடங்காகும்

- ஒரு குறிப்பிட்ட எண்ணிக்கையுள்ள ஆட்கள் ஒரு வேலையை முடிக்க 40 நாட்கள் ஆகிறது . 45 பேர் அதிகமாக இருந்தால் அதனை முடிக்க 25 நாட்கள் ஆகும் . முன்னர் அமர்த்திய ஆட்களின் எண்ணிக்கை

| ஆட்கள் | நாட்கள் |
|---|---|
| $x$ | 40 |
| $x$ + 45 | 25 |

$x : x + 45 = 25 : 40$

R.SIVA M.Sc.,B.Ed., 8015118094

$40x = 25(x + 45)$

$40x - 25x = 1225$

$15x = 1225$

$x = 1225 / 15 = 75$

விடை 75 ஆட்கள்

- A யின் வருமானம் B யின் வருமானத்தை விட 10 % அதிகம் எனில் B யின் வருமானம் A ன் வருமானத்தை விட எவ்வளவு சதவீதம் குறைவு

  B ன் வருமானம் 100 என்க

  இதில் 10 % = 10

  A ன் வருமானம் = B ன் வருமானம் + 10 %

  = 100 + 10 = 110

  ரூ 110 க்கு 10 ரூபாய்

  100 க்கு = $\frac{100 \times 10}{110} = \frac{100}{11} = 9\frac{1}{11}$

  B யின் வருமானம் A ன் வருமானத்தை விட $9\frac{1}{11}$ சதவீதம் குறைவு

- 1500 மாணவர்கள் கொண்ட பள்ளிக்கு 90 ஆசிரியர்கள் தேவை . 2000 மாணவர்கள் கொண்ட பள்ளிக்கு எத்தனை ஆசிரியர்கள் தேவை

  1500 மாணவர்கள் கொண்ட பள்ளிக்கு 90 ஆசிரியர்கள்

  2000 மாணவர்கள் கொண்ட பள்ளிக்கு = $\frac{2000 \times 90}{1500} = \frac{20 \times 90}{15} = 20 \times 6 = 120$

- ஒரு வேலையை 150 ஆட்கள் 12 நாட்களில் முடிப்பர் . 120 ஆட்கள் அதே வேலையை எத்தனை நாட்களில் முடிப்பர்

  | ஆட்கள் | நாட்கள் |
  |---|---|
  | 150 ↑ | 12 ↓ |
  | 120 | $x$ |

  குறைந்ததில் இருந்து அதிகம் நோக்கி அம்புக்குறி

  120 : 150 = 12 : $x$

  $120x = 150 \times 12$

  $x = (150 \times 12) \div 120 = 15$ நாட்கள்

- 276 வீரர்கள் உள்ள பட்டாளத்தில் 20 நாட்களுக்குத்தேவையான சமையல் உள்ளது . அந்த பொருட்கள் 46 நாட்களுக்கு நீடிக்க வேண்டுமெனில் எத்தனை வீரர்கள் பட்டாளத்தை விட்டு செல்ல வேண்டும்

  | வீரர்கள் | நாட்கள் |
  |---|---|
  | 276 | 20 |
  | $x$ | 46 |

  $x$ : 276 = 20 : 46

  $46x = 276 \times 20$

  $x = \frac{276 \times 20}{46} = 120$

R.SIVA M.Sc.,B.Ed.,8015118094

அந்த பொருட்கள் 46 நாட்களுக்கு நீடிக்க வேண்டுமெனில் 120 வீரர்கள் மட்டுமே இருக்க வேண்டும்

அந்த பொருட்கள் 46 நாட்களுக்கு நீடிக்க வேண்டுமெனில் (276 – 120 ) 156 வீரர்கள் பட்டாளத்தை விட்டு செல்ல வேண்டும்

- ஒரு புத்தகத்தில் 70 பக்கங்கள் உள்ளன . ஒரு பக்கத்தில் 30 வரிகள் அச்சிடப்படுகிறது . ஆனால் அதே செய்தியை ஒரு பக்கத்தில் 20 வரிகள் என அச்சிட்டால் எத்தனை பக்கங்கள் இருக்கும் ?
  மொத்த வரிகள் $70 \times 30 = 2100$
  பக்கத்திற்கு 20 வரிகள் எனில் மொத்த பக்கங்கள் = $\frac{2100}{20} = 105$

- ஒரு குறிப்பிட்ட அசலுக்கு 5 ஆண்டுகளுக்கு வட்டி ரூ 600 எனில் அதே அசலுக்கு அதே வீதத்தில் 8 ஆண்டுகளுக்கு வட்டி எவ்வளவு

| ஆண்டு | வட்டி |
|---|---|
| 5 ↓ | 600 ↓ |
| 8 | $x$ |

$5 : 8 = 600 : x$

$5x = 600 \times 8$

$x = \frac{600 \times 8}{5} = 960$

8 ஆண்டுகளுக்கு வட்டி 960

- ஒரு குறிப்பிட்ட நாளில் 35 மாணவர்கள் உள்ள ஒரு வகுப்பில் 7 மாண்வர்கள் வருகை தரவில்லை எனில் வருகை தராத மாணவர்களின் சதவீதம் என்ன
  35 மாண்வர்களில் 7 பேர் வராதவர்கள்
  100 க்கு ?
  வருகை தராதவர்களின் சதவீதம் = $\frac{100 \times 7}{35} = 20\ \%$
- ராம் வாங்கிய 36 மாம்பழங்களில் 5 மாம்பழங்கள் அழுகி விட்டன . அழுகிய மாம்பழங்களின் சதவீதம் என்ன
  36 மாம்பழத்திற்கு 5
  100 க்கு ?
  அழுகிய மாம்பழங்களின் சதவீதம் = $\frac{100 \times 5}{36} = \frac{25 \times 5}{9} = \frac{125}{9} = 13.89\ \%$
- 50 பேர் கொண்ட வகுப்பில் 23 பேர் மாணவிகள் . மற்றவர்கள் மாணவர்கள் எனில் மாணவ மாணவிகளின் சதவீதங்களைக் காண்

| வகுப்பு | மாணவிகள் | மாணவர்கள் |
|---|---|---|
| 50 பேர் | 23 | 50 – 23 =27 |
| 100 பேர் | $23 \times 2 = 46$ | $27 \times 2 = 54$ |

$( 50 \times 2 = 100 )$

மாணவிகள் 46 %

மாணவர்கள் 54 %

R.SIVA M.Sc.,B.Ed ., 8015118094

- ரவி கணிதத்தில் 75 க்கு 66 மதிப்பெண்களும் அறிவியலில் 80 க்கு 72 ம் பெற்றுள்ளார் எனில் எந்த பாடத்தில் அதிக மதிப்பெண் பெற்றுள்ளார்

  கணிதத்தில் 75 க்கு 66

  5 க்கு $\frac{66}{15} = 4.4$

  அறிவியலி ல் 80 க்கு 72

  5 க்கு $\frac{72}{16} = 4.5$

  அறிவியலில் அதிக மதிப்பெண் பெற்றுள்ளார் .

- ஷியாமின் மாத வருமானம் ரூ 12, 000 . அவர் சேமிக்கும் தொகை ரூ 1200 சேமிப்பு செலவு ஆகியவற்றின் சதவீதம் காண்

  சேமிப்பு = 12000 க்கு 1200

  100 க்கு $\frac{1200 \times 100}{12000}$ = 10 %

  செலவு சதவீதம் 100 % – 10 % = 90 %

- ராம் தன்னுடைய வருமானத்தில் 25 % ஐ வாடகையாகக் கொடுக்கிறார் . அவருடைய வருவாய் 25000 எனில் வாடகைத்தொகை யாது

  25000 ல் 25 % = $\frac{25000 \times 25}{100} = 250 \times 25 = 6250$

- ஒரு குழு 25 போட்டிகளில் விளையாடுகிறது . 36 % வெற்றிபெறுகிறது . குழு வெற்றியடைந்த போட்டிகளின் எண்ணிக்கை யாது

  25 ல் 36 % = $\frac{25 \times 36}{100}$ = 9

  வெற்றியடைந்த போட்டிகள் 9

- ஒரு கிராமத்தில் மக்கள் தொகை 32 000 . அவர்களில் 40 % ஆண்கள் , 25 % பெணக்ள் மீதம் உள்ளோர் குழந்தைகள் . ஆண்கள் மற்றும் குழந்தைகளின் எண்ணிக்கை யாது

  ஆண்கள் 32000 ல் 40 % = $\frac{32000 \times 40}{100}$ = 12800

  குழந்தைகள் சதவீதம் ( 100 % –40 % – 25 % ) = 35 %

  குழந்தைகள் 32000 ல் 35 % = $\frac{32000 \times 25}{100}$ =11200

- ஒரு பழைய மகிழுந்தின் விலை ரூ 45000 . அதன் விலை 15 % குறைக்கப்படுமேயானால் புதிய விலை என்ன

  புதிய விலை 100 % – 15 % = 85 %

  45000 ல் 85 % = $\frac{45000 \times 85}{100}$ = 38250

- ஒரு வீட்டை வினொத் 27 ,50,000 க்கு வாங்கி சீர் செய்ய 2,50,000 ஐ செலவிடுகிறார் . அந்த வீட்டை 33 ,00 ,000 க்கு விற்கிறார் எனில் இலாப நட்ட சதவீதம் காண்

  வீடு வாங்கியது 27,50,000

R.SIVA M.Sc., B.Ed ., 8015118094

TNPSC MATHS. R.SIVA M.Sc.,B.Ed., Cell : 8015118094 mail id : sivatvmalai@yahoo.co.in

செலவு 2,50,000
அடக்க விலை 30,00,000
விற்ற விலை 33,00,000
லாபம் = 3,00,000
இலாப சதவீதம் = $\frac{\text{இலாபம்} \times 100}{\text{அடக்க விலை}}$ = $\frac{3,00,000 \times 100}{30,00,000}$ = 10 %

- ஒரு கடைக்காரர் 10 வாழைப் பழங்களை ரூ 100 க்கு வாங்கினார். 2 வாழைப் பழங்கள் அழுகி விட்டன . மீதமுள்ள பழங்களை ஒரு பழம் 11 க்கு விற்கிறார் . அவருக்கு கிடைத்த லாப நட்ட சதவீதம் காண்
  1 பழத்தின் அடக்க விலை = $\frac{100}{10}$ = 10
  நல்ல பழங்கள் = 10 – 2 = 8
  8 பழங்கள் விற்ற விலை = 8 ×11 = 88
  நட்டம் = 100 – 88 = 12
  நட்ட சதவீ தம் = $\frac{\text{நட்டம்} \times 100}{\text{அடக்க விலை}}$ = $\frac{12 \times 100}{100}$ = 12 %
- ஒரு கடைக்காரர் 100 பேனாக்களை 250 க்கு வாங்கி 1 பேனா ரூ 4 க்கு விற்கிறார் . லாப சதவீதம் என்ன
  100 பேனாக்கள் வாங்கிய விலை 250
  100 பேனாக்கள் விற்ற விலை = 100 × 4 = 400
  இலாபம் = 400 – 250 = 150
  லாபசதவீதம் = $\frac{\text{இலாபம்} \times 100}{\text{அடக்க விலை}}$ = $\frac{150 \times 100}{250}$ = $\frac{3 \times 100}{5}$ = 60 %
- ஒரு காய்கறி வியாபாரி 40 கிலோ வெங்காயத்தை ரூ 360 க்கு வாங்குகிறார் அவர் 1 கிலோ ரூ 11 என்ற விலைக்கு 36 கிலோ விற்கிறார் . மீதமுள்ளதை ரூ 4. 50 க்கு 1 கிலோ என விற்கிறார் இலாப / நட்ட சதவீதம் காண்
  40 கிலோ வெங்காயம் வாங்கிய விலை = 360
  36 கிலோ வெங்காயம் விற்ற விலை = 36 × 11 = 396
  4 கிலோ வெங்காயம் விற்ற விலை = 4 × 4.50 = 18
  மொத்த விற்ற விலை = 396 + 18 = 414
  இலாபம் = விற்ற விலை – வாங்கிய விலை = 414 – 360 = 54
  லாபசத்வீதம் = $\frac{\text{இலாபம்} \times 100}{\text{அடக்க விலை}}$ = $\frac{54 \times 100}{360}$ = $\frac{6 \times 100}{40}$ = $\frac{6 \times 10}{4}$ = 15 %
- ரூ 5000 க்கு 10 % வட்டி வீதத்தில் 5 ஆண்டுகளில் பெறப்படும் தனிவட்டியையும் தொகையையும் காண்
  தனிவட்டி
  $I = \frac{pnr}{100} = \frac{5000 \times 5 \times 10}{100} = 2500$
  தொகை = அசல் + வட்டி = 5000 + 2500 = 7500

R.SIVA M.Sc.,B.Ed., 8015118094

- ரூ 1200 க்கு 12 $\frac{1}{2}$ % வட்டி வீதம் 3 ஆண்டுகளில் பெறப்படும் தனி வட்டியையும் தொகையையும் காண்

12 $\frac{1}{2}$ = $\frac{25}{2}$

தனிவட்டி $I = \frac{pnr}{100} = \frac{1200 \times 3 \times 25}{2 \times 100} = \frac{12 \times 3 \times 25}{2} = 6 \times 3 \times 25 = 450$

தொகை = அசல் + வட்டி = $1200 + 450 = 1650$

- ஆண்டிற்கு 10 % வீதம் வட்டி தரும் வங்கியில் லோகேஷ் 10,000 வைப்பு நிதியாக செலுத்தினார் . 2 ஆண்டு 3 மாதங்களுக்குப் பிறகு அவர் திரும்ப பெறுகிறார் வட்டி காண்.

$P = 10000$

$n$ = 2 ஆண்டுகள் 3 மாதங்கள் = $27$ மாதங்கள்

$r = 10\ \%$

தனிவட்டி $I = \frac{pnr}{100} = \frac{10000 \times 27 \times 10}{12 \times 100} = \frac{100 \times 27 \times 10}{12} = 2250$

- ரூ 2500 ஐ 13 % ஆண்டு வட்டி வீதம் வைப்பு நிதியாகச் செலுத்தினால் 146 நாட்களில் பெறும் தொகையை காண்

காலம் நாட்களில் தரப்பட்டுள்ளதால் அதனை 365 ஆல் வகுக்க காலம் ஆண்டில் கிடைக்கும் அசல் = 2500 , வட்டிவீதம் = 13 % காலம் $\frac{146}{365}$ ஆண்டுகள்

தனிவட்டி $I = \frac{pnr}{100} = \frac{2500 \times 146 \times 13}{365 \times 100} = \frac{25 \times 2 \times 13}{5} = 5 \times 2 \times 13 = 130$

தொகை = அசல் + வட்டி = 2500 + 130 = 2630

- ரூ 12000 க்கு 9 % ஆண்டு வட்டி வீதம் 21 மே 1999 இலிருந்து 2 ஆகஸ்டு 1999 வரை கிடைக்கும் தனிவட்டியையும் தொகையையும் காண்

| | |
|---|---|
| 21 மே 1999 இலிருந்து 31 மே வரை | = 11 நாட்கள் ( 31 – 20 ) |
| ஜூன் | = 30 நாட்கள் |
| ஜூலை | = 31 நாட்கள் |
| ஆகஸ்ட் | = 1 நாள் |
| மொத்தம் | = 73 நாட்கள் |

தனிவட்டி $I = \frac{pnr}{100} = \frac{12000 \times 73 \times 9}{365 \times 100} = \frac{120 \times 1 \times 9}{5} = 24 \times 9 = 216$

தொகை = அசல் + வட்டி = 12000 + 216 = 12216

- சத்யா ரூ 6000 ஐ ஒரு வங்கியில் செலுத்தி 5 ஆண்டுகள் முடிவில் 7500 பெற்றார் எனில் வட்டி வீதம் காண்

அசல் = 6000

காலம் = 5 ஆண்டுகள்

வட்டி = 7500 – 6000 = 1500

R.SIVA M.Sc.,B.Ed., 8015118094

TNPSC MATHS. R.SIVA M.Sc.,B.Ed., Cell : 8015118094 mail id : sivatvmalai@yahoo.co.in

தனிவட்டி $I = \frac{pnr}{100}$

$1500 = \frac{6000 \times 5 \times r}{100}$

$r = \frac{1500 \times 100}{6000 \times 5} = 5\ \%$

- 10 % வருட வட்டி வீதத்தில் $2\frac{1}{2}$ ஆண்டுகளுக்கு ரூ 250 வட்டியாகத்தரும் அசல் தொகையைக் காண்

வட்டி = 250

காலம் $= 2\frac{1}{2} = \frac{5}{2}$ ஆண்டுகள்

வட்டி வீதம் = 10 %

தனிவட்டி $I = \frac{pnr}{100}$

$250 = \frac{p \times 5 \times 10}{2 \times 100}$

$p = \frac{250 \times 2 \times 100}{10 \times 5} = 5 \times 2 \times 100 = 1000$

- எத்தனை ஆண்டுகளில் 8 % வட்டி வீதத்தில் ரூ 5000 ஆனது ரூ 5800 ஆக மாறும்

வட்டி = 5800 – 5000 = 800

வட்டி வீதம் = 8 %

அசல் = 5000

காலம் = ?

தனிவட்டி $I = \frac{pnr}{100}$

$800 = \frac{5000 \times n \times 8}{100}$

$n = \frac{800 \times 100}{5000 \times 8} = 2$ ஆண்டுகள்

- ஒரு தொகையானது 10 ஆண்டுகளில் இரட்டிப்பு ஆகிறது வட்டி வீதம், காண்

அசல் ரூ 100 என்க

கிடைக்கும் தொகை 200

வட்டி = 200 – 100 = 100

$n = 10$ ஆண்டுகள்

தனிவட்டி $I = \frac{pnr}{100}$

$100 = \frac{100 \times 10 \times r}{100}$

$r = \frac{100 \times 10\ 0}{100 \times 10} = 10\ \%$

- ஒரு தொகையானது $12\frac{1}{2}$ % ஆண்டு வட்டி வீதத்தில் ஒரு குறிப்பிட்ட ஆண்டுகளில் இரட்டிப்பு ஆகிறது . ஆண்டுகளின் எண்ணிக்கையை காண்

R.SIVA M.Sc.,B.Ed ., 8015118094

அசல் = 100 என்க

கிடைக்கும் தொகை 200 ( இரட்டிப்பு )

வட்டி = 200 – 100 = 100

வட்டி வீதம் $r = 12\frac{1}{2}\% = \frac{25}{2}\%$

தனிவட்டி $I = \frac{pnr}{100}$

$100 = \frac{100 \times n \times 25}{2 \times 100}$

$n = \frac{100 \times 100 \times 2}{100 \times 25} = 8$ ஆண்டுகள்

- ஒரு குறிப்பிட்ட தொகையானது 3 ஆண்டுகளில் ரூ 6500 ஆகவும் $1\frac{1}{2}$ ஆண்டுகளில் ரூ 5750 ஆகவும் மாறுகிறது . அசல் மற்றும் வட்டி வீதம் காண்.

தொகை + 3 ஆண்டு வட்டி = 6500..................................(1)

தொகை + $1\frac{1}{2}$ ஆண்டு வட்டி = 5750..................................(2)

**(1)** , (2) ஐக் கழிக்க $1\frac{1}{2}$ ஆண்டு வட்டி = 750

இதனை (2) ல் பிரதியிட

தொகை + 750 = 5750

தொகை = 5750 -750 = 5000

தொகையானது 3 ஆண்டுகளில் ரூ 6500 ஆகிறது எனில்

தொகை 5000

வட்டி 6500 – 5000 = 1500

காலம் 3 ஆண்டுகள்

வட்டி வீதம் ?

தனிவட்டி $I = \frac{pnr}{100}$

$1500 = \frac{5000 \times 3 \times r}{100}$

$r = \frac{100 \times 1500}{5000 \times 3} = 10\%$

- சிமெண்டும் மணலும் 2 : 7 என்ற விகிதத்தில் ஒரு க்லவையில் உல்ளது . அதில் சிமெண்டின் எடை 100 கிலோ எனில் மணலின் எடை என்ன

சிமெண்ட் : மணல்

2: 7 = 100 : $x$

$2x = 100 \times 7$

$x = \frac{700}{2} = 350$

- ----- : 1.5 = 6 : 4.5 கோடிட்ட இடம் ?

$6 \times 1.5 = 4.5 \times x$

$x = \frac{6 \times 1.5}{4.5} = 2$

RSIVA M.Sc.,B.Ed., 8015118094

- ஒரு இயந்திரம் 30 நிமிடங்களில் 750 பக்கங்களை அச்சடிக்கிறது எனில் 4500 பக்கங்களை அச்சடிக்க எவ்வளவு நேரமாகும்

| பக்கம் | நேரம் |
|---|---|
| 750 ↓ | 30 ↓ |
| 4500 | $x$ |

750 : 4500 = 30 : $x$

$$750\,x = 30 \times 4500$$

$$x = \frac{30 \times 4500}{750} = 180$$

அல்லது

750 க்கு 30 நிமிடங்க்கள்

4500 க்கு = $\frac{30 \times 4500}{750} = 180$

- 3 : 4 க்குச் சமமான விகிதம்

  அ) 12 : 9 ஆ) 6 : 10 இ) 4:3 ஈ) 6:8

  விடை 6: 8

  ஏனெனில் 3 × 2 = 6

  4 × 2 = 8

  அல்லது 3:4=6:8

  ( நடு எண்களின் பெருக்கல் = இறுதி எண்களின் பெருக்கல் 4 × 6 = 3 × 8

- 150 ஐ 3: 2 என பிரிக்கும்போது கிடைக்கும் பெரிய பகுதி

  அ) 50 ஆ 90 இ 100 ஈ 120

  விடை 90

  3:2 அதாவது 3+2 = 5 பங்குகள் = 150

  1 பங்கு = 150 / 5 = 30

  பெரிய பகுதி 3 பங்கு = 3 × **30 = 90**

- கீழ்க்கண்டவற்றில் எது விகித சமம்

  அ 2:3 = 3:2 ஆ 2:5 = 4:8 இ 3:2 = 6:4 ஈ 3:4 = 4:5

  விடை 3:2 = 6: 4 ஏனெனில் 3 × ***4 = 12 , 2*** × ***6 = 12***

- ரூ 10 க்கு வங்கப்பட்ட பையானது ரூ15 க்கு விற்கப்பட்டால் கிடைக்கும் லாப வீதம்

  அ) 25 % ஆ 50 % இ 75 % ஈ 100%

  விடை 50 %

  லாபம் = 15 – 10 = 5

  10 க்கு லாபம் = ரூ5

  100 க்கு லாபம் = 50

  லாபசதவீதம் 50%

- ரூ 20 க்கு வாங்கப்பட்ட பொம்மை ரூ 10 க்கு விற்கப்பட்டால் ஏற்படும் நஷ்ட சதவீதம்

R.SIVA M.Sc., B.Ed ., 8015118094

அ) 25 % ஆ 50 % இ 75 % ஈ 100 %
விடை 50 %
நஷ்டம் = 20 −10 = 10
நஷ்ட சதவீதம் = $\frac{\text{நஷ்டம்}}{\text{அடக்க விலை}} \times$ **100 =** $\frac{10}{20}$ × **100 = 50 %**

- 4 a = 3 *b* எனில் ***a : b*** = ------: ------
  விடை 3 : 4 ஏனெனில் 4 a = 3 ***b*** இதில் இருந்து ***a / b*** = 3 / 4

- ***2 : 3*** அல்லது ***3: 4*** இவற்றில் எது சிறியது
  பகுதியில் உள்ள 3,4 ன் மீ.சி.ம 12
  $2 : 3 = \frac{2}{3} = \frac{2 \times 4}{3 \times 4} = \frac{8}{12}$
  $3 : 4 = \frac{3 \times 3}{4 \times 3} = \frac{9}{12}$
  $\frac{8}{12} < \frac{9}{12}$
  2 : 3 ஆனது 3: 4 ஐ விட சிறியது

- 50 ல் 12 $\frac{1}{2}$ % அல்லது 20 ல் 2 $\frac{1}{2}$ % இவற்றில் எது சிறியது

  50 ல் 12 $\frac{1}{2}$ % = $\frac{50 \times 25}{2 \times 100} = \frac{25 \times 25}{2 \times 100} = 6.25$
  20 ல் 2 $\frac{1}{2}$ % = $\frac{20 \times 5}{2 \times 100} = \frac{1}{2} = 0.5$
  $0.5 < 6.25$
  20 ல் 2 $\frac{1}{2}$ % < 50 ல் 12 $\frac{1}{2}$ %
  சிறியது 20 ல் 2 $\frac{1}{2}$ %

**பொதுவான கணக்குகள்**

- ஒரு எண்ணின் 5 மடங்குடன் 4 ஐக் கூட்ட 34 கிடைக்கும் அந்த எண்ணைக் காண்
  $5x + 4 = 34$
  $5x = 34 - 4$
  $5x = 30$
  $x = \frac{30}{5} = 6$

- ஒரு கடிகாரத்தில் நிமிட முள் 15 நிமிடங்களில் எத்தனை பாகைகள் கடந்து செல்லும்
  $15 \times 6 = 90^0$ ஏனெனில் 60 நிமிடங்கள் = 1 மணி = $360^0$
  1 நிமிடம் = 360 / 60 = $6^0$

- ஒரு கடிகாரத்தில் நிமிட முள் 30 நிமிடங்களில் எத்தனை பாகைகள் கடந்து செல்லும்
  $30 \times 6 = 180^0$

R.SIVA M.Sc.,B.Ed., 8015118094

- ஒரு கடிகாரத்தில் நிமிட முள் 1 மணி நேரத்தில் எத்தனை பாகைகள் கடந்து செல்லும்

  $60 \times 6 = 360^0$

- 3 மணி நேரத்தில் மணி முள் எத்தனை பாகை கடந்து வரும்

  விடை $90^0$

  ஏனெனில் கடிகாரத்தில் 1 சுற்றில் = 60 கோடுகள் ( நிமிடங்கள் )

  60 கோடுகள் = $360^0$

  1 கோடு = $6^0$

  3 மணி நேரத்தில் மணி முள் 15 கோடுகளைக் கடக்கும் . $15 \times 6 = 90$

- ஒரு தோட்டக்காரர் 5329 செடிகளை வரிசையாக நடுவதாக திட்டமிட்டு எத்தனை வரிசைகள் உள்ளதொ அத்தனை வரிசைகளின் எண்ணிக்கைக்கு சமமான செடிகளை ஒவ்வொரு வரிசையிலும் நட்டார் எனில் வரிசையில் உள்ள செடிகளின் எண்ணிக்கை யாது

  5329 ன் வர்க்க மூலம் காண வேண்டும்

  விடை 73

| | 73 |
|---|---|
| 7 | 5329 |
| | 49 |
| 14 | 429 |
| | 429 |
| | 0 |

- ஒரு பின்னத்தின் தொகுதியுடன் 2 ஐக் கூட்டினால் அந்த பின்னம் $\frac{1}{2}$ஆக மாறும் பகுதியுடன் 2 ஐக் கூட்டினால் அந்த பின்னம் $\frac{1}{4}$ஆக மாறும் . கொடுக்கப்பட்ட பின்னம்

  $\frac{x}{y}$ என்க

  $\frac{x+2}{y} = \frac{1}{2}$

  $2(x+2) = y$

  $2x - y = -4$

  $\frac{x}{y+2} = \frac{1}{4}$

  $4x = y + 2$

  $4x - y = 2$

  $4x - y = 2$

  $2x - y = -4$

  கழிக்க

  $2x = 6$

R.SIVA M.Sc.,B.Ed ., 8015118094

TNPSC MATHS. R.SIVA M.Sc.,B.Ed., Cell : 8015118094 mail id : sivatvmalai@yahoo.co.in

$x = 3$

$x = 3$ ஐ $2x - y = -4$ ல் பிரதியிட $2(3) - y = -4$

$6 - y = -4$

$y = 10$

தேவையான பின்னம் $\frac{3}{10}$

- ஒரு பின்னத்தின் தொகுதி மற்றும் பகுதியின் கூடுதல் 12 . பகுதியுடன் 3 ஐக் கூட்டினால் அது தொகுதியைப் போல் இரு மடங்காகிறது . பின்னம் யாது

பின்னம் $\frac{x}{y}$ என்க

$x + y = 12$

$y + 3 = 2(x)$ இதிலிருந்து $2x - y = 3$

$x + y = 12$

$2x - y = 3$

இரண்டையும் கூட்ட

$3x = 15$

$x = 15 / 3 = 5$

$x = 5$ ஐ $x + y = 12$ ல் பிரதியிட $y = 12 - x = 12 - 5 = 7$

பின்னம் $\frac{5}{7}$

- ஒரு பின்னத்தின் தொகுதியிலிருந்து 1 ஐக் கழித்து பகுதியுடன் 3 ஐக் கூட்டினால் அந்த பின்னம் $\frac{1}{4}$ ஆக மாறும் . தொகுதி மற்றும் பகுதி இரண்டிலும் 3 ஐக் கூட்டினால் அந்த பின்னம் $\frac{3}{4}$ ஆக மாறும் பின்னம் யாது

பின்னம் $\frac{x}{y}$ என்க

$\frac{x-1}{y+3} = \frac{1}{4}$ பின்னத்தின் தொகுதியிலிருந்து 1 ஐக் கழித்து பகுதியுடன் 3 ஐக் கூட்டினால்

~~$4x - 4 = y + 3$~~

$4x - y = 7$

மேலும் $\frac{x+3}{y+3} = \frac{3}{4}$

$4x + 12 = 3y + 9$

$4x - 3y = -3$

$4x - y = 7$

$4x - 3y = -3$

$2y = 10$

$y = 5$

$y = 5$ ஐ $4x - y = 7$ ல் பிரதியிட $4x - 5 = 7$

$4x = 7+5 = 12$

R.SIVA M.Sc.,B.Ed ., 8015118094

TNPSC MATHS. R.SIVA M.Sc.,B.Ed., Cell : 8015118094 mail id : sivatvmalai@yahoo.co.in

$x = 12 / 4 = 3$

பின்னம் $\frac{x}{y} = \frac{3}{5}$

- A மற்றும் B ஆகிய இருவரின் வயதுகளின் கூடுதல் 37 ஐந்து ஆண்டுகளுக்கு முன் அவர்களின் வயது விகிதம் 4 : 5 அவர்களின் தற்போதைய வயது என்ன

தற்போது A ன் வயது $x$ என்க B ன் வயது y என்க

$x + y = 37$ ……………………………………… ( 1 )

$(x – 5) : (y – 5) = 4 : 5$

$4 (y – 5) = 5 (x – 5)$

$5x - 25 - 4y + 20 = 0$

$5x – 4y = 5$ …………………………………………..( 2 )

(1) × 5 …….. $5x + 5y = 185$

$5x – 4y = 5$

$9y = 180$

$y = 180 / 9 = 20$

y=20 என்பதை $x + y = 37$ ல் பிரதியிட

$x + 20 = 37$

$x = 37 – 20 = 17$

A ன் வயது 17 மற்றும் B ன் வயது 20

- இரண்டு எண்களின் கூடுதல் 72 . பெரிய எண் சிறிய எண்ணைப் போல் 5 மடங்கு அந்த எண்கள் யாவை

சிறிய எண் $x$ எனில் பெரிய எண் $5x$

$x + 5x = 72$

$6x = 72$

$x = 12$

$5x = 60$

தேவையான எண்கள் 12 , 60

- இரண்டு எண்களின் வித்தியாசம் 5 . முதல் எண்ணின் இரண்டு மடங்குடன் இரண்டாம் எண்ணின் 4 மடங்கைக் கூட்டினால் 70 கிடைக்கும் அந்த எண்களைக் காண்

இரண்டு எண்கள் $x$ , y என்க

$x – y = 5$……………………………….(1)

$2x + 4y = 70$……………………………..(2)

(1) X 2 ………………. $2x – 2y = 10$

(2) …………………….$2x + 4y = 70$

கழிக்க – – –

$- 6y = - 60$

$y = 10$

y =10 என்பதை $x – y = 5$ ல் பிரதியிட

$x - 10 = 5$

$x = 10+5$

$x = 15$

எண்கள் 15 , 10

R.SIVA M.Sc.,B.Ed., 8015118094

TNPSC MATHS. R.SIVA M.Sc.,B.Ed., Cell : 8015118094 mail id : sivatvmalai@yahoo.co.in

- வாணியிடம் சில 2 ரூபாய் நாணயங்கள் மற்றும் 5 ரூபாய் நாணயங்கள் உள்ளன. நாணயங்களின் மொத்த எண்ணிக்கை 15 . மொத்த மதிப்பு 51 ஒவ்வொரு வகையிலும் உள்ள நாணயங்களின் எண்ணிக்கையைக் காண்

  2 ரூபாய் நாணயங்கள் எண்ணிக்கை $x$

  5 ரூபாய் நாணயங்கள் எண்ணிக்கை $y$ என்க

  நாணயங்களின் மொத்த எண்ணிக்கை 15 எனவே $x + y = 15$ ……………………….(1)

  மொத்த மதிப்பு 51 $2x + 5y = 51$……………………(2)

  (1) × 2 $2x + 2y = 30$

  $2x + 5y = 51$

  \- - -

  கழிக்க $-3y = -21$

  $y = 7$

  $y = 7$ என்பதை $x + y = 15$ ல் பிரதியிட $x + 7 = 15$

  $x = 15 - 7 = 8$

  2 ரூபாய் நாணயங்கள் எண்ணிக்கை $x = 8$

  5 ரூபாய் நாணயங்கள் எண்ணிக்கை $y = 7$

- ஒரு ஈரிலக்க எண்ணின் ஒன்றாம் இலக்கம் , பத்தாம் இலக்கத்தின் இரு மடங்கு . இலக்கங்களை இடம் மாற்றினால் கிடைக்கும் புதிய எண் கொடுக்கப்பட்ட எண்ணை விட 36 அதிகம் அந்த எண்களைக் காண்

  ஈரிலக்க எண் $xy$ என்க

  $y = 2x$ (ஒன்றாம் இலக்கம் , பத்தாம் இலக்கத்தின் இரு மடங்கு )

  மேலும் $(10y + x) = (10x + y) + 36$ ஏனெனில் $xy = 10x + y$ மற்றும் $yx = 10y + x$ என எழுதலாம்

  $10x - x - 10y + y + 36 = 0$

  $9x - 9y + 36 = 0$

  $x - y + 4 = 0$

  $x - 2x + 4 = 0$

  $-x = -4$

  $x = 4$

  $x = 4$ என்பதை $y = 2x$ ல் பிரதியிட

  $y = 2x = 2(4) = 8$

  எனவே ஈரிலக்க எண் $xy = 48$

- ஒரு எண்ணின் பாதியுடன் அந்த எண்ணின் ஐந்தில் ஒரு பங்கைக் கூட்டினால் 21 கிடைக்கிறது . அந்த எண் யாது

  எண் $x$ என்க

  $\frac{x}{2} + \frac{x}{5} = 21$

  $\frac{5x+2x}{10} = 21$

  $\frac{7x}{10} = 21$

  $7x = 210$

R.SIVA M.Sc.,B.Ed.,8015118094

$x = 30$

தேவையான எண் 30

- ஒரு மகன் மற்றும் தந்தை இவர்களின் வயது விகிதம் 3 : 8 மகன் தந்தையை விட 35 ஆண்டுகள் இளையவர் எனில் அவர்களின் வயதுகளைக் காண்

  மகன் வயது $3x$

  தந்தை வயது $8x$ என்க ஏனெனில் வயது விகிதம் 3 : 8

  $8x - 3x = 35$ மகன் தந்தையை விட 35 ஆண்டுகள் இளையவர்

  $5x = 35$

  $x = 7$

  மகன் வயது $3x = 3 \times 7 = 21$

  தந்தை வயது $8x = 8 \times 7 = 56$

- அடுத்தடுத்த 3 ஒற்றை எண்களின் கூடுதல் 51 அந்த எண்கள் யாவை

  முதல் ஒற்றை எண் $x$

  இரண்டாம் ஒற்றை எண் $x + 2$

  மூன்றாம் ஒற்றை எண் $x + 4$ ஏனெனில் அடுத்தடுத்த ஒற்றை எண்களின் வித்தியாசம் 2

  $(x) + (x + 2) + (x + 4) = 51$

  $3x + 6 = 51$

  $3x = 45$

  $x = 15$

  தேவையான எண்கள் 15 , 17 , 19

- நீ ஒரு வரிசையில் முன்பிருந்தும் பின்பிருந்தும் 15 ஆவது இடத்தில் இருந்தால் அந்த வரிசையிம் நீளம்

  விடை 29 ( இடை நிலை கருத்து ) 14 நபர்கள் 15 ஆவது நபர் 14 நபர்கள்

- ஒரு குழுவில் உள்ளவர்களை 24 , 45, 60 என சமமாகப் பிரித்தால் குழுவில் உள்ள குறைந்த பட்ச நபர்கள் எவ்வளவு

  24 , 45 , 60 ன் மீச்சிறு பொது மடங்கு காண வேண்டும்

  $24 = 2 \times 2 \times 2 \times 3$

  $45 = 3 \times 3 \times 5$

  $60 = 2 \times 2 \times 3 \times 5$

  24 , 45 , 60 ன் மீ.சி.ம = $2^3 \times 3^2 \times 5 = 8 \times 9 \times 5 = 360$

- 3 , 7,9 ,13 ,15,19 ,--------, 25 விடுபட்ட எண் 21 ஏனெனில் 19 + 2 = 21

  4 , 2 ஐ மாற்றி மாற்றி உறுப்புகளோடு கூட்டுகிறோம்.

- 1 மணிக்கு 1 முறையும் , 2 மணிக்கு 2 முறையும் ஒரு கடிகாரம் அடித்தால் 24 மணி நேரத்தில் எத்தனை முறை மணி அடிக்கும்

  $1 + 2 + 3 + \ldots\ldots + 12 = \frac{12 \times 13}{2} = 6 \times 13 = 78$ முறை

  மற்றொரு 12 மணி நேரத்தில் 78 முறை

R.SIVA M.Sc.,B.Ed ., 8015118094

TNPSC MATHS. R.SIVA M.Sc.,B.Ed., Cell : 8015118094 mail id : sivatvmalai@yahoo.co.in

ஆக 24 மணி நேரத்தில் 78 + 78 = 156 முறை மணி அடிக்கும்

- ஒரு மாணவர் ஒரு எண்ணை 27 ஆல் பெருக்குவதற்கு பதில் 72 ஆல் பெருக்க அவனுக்கு கிடைத்த விடை சரியான விடையை விட 23175 அதிகம் அப்படியெனில் சரியான எண் யாது

  தேவையான எண் $x$
  சரியான பெருக்கல் 27 $x$
  தவறான பெருக்கல் 72 $x$
  தவறான பெருக்கல் பலன் = சரியான பெருக்கல் + 23175
  $72x = 27x + 23175$
  $72x - 27x = 23175$
  $45x = 23175$
  $x = 515$

- ஒருவருடைய பிறந்த தேதி 29.02.1964 . அவர் 29.02.1976 அன்று வரை கொண்டாடிய பிறந்த நாட்களின் எண்ணிக்கை
  விடை 3
  4 ஆண்டுகளுக்கு ஒரு முறை மட்டுமே பிப்ரவரியில் 29 நாட்கள்
  1968 – முதல் முறை
  1972 – இரண்டாம் முறை
  1976 – மூன்றாம் முறை

- இரண்டு நபர்களுக்கு முன்னே ஒரு நபர் . இரண்டு நபர்களுக்கு பின்னே ஒரு நபர் . ஒருவர் நடுவில் எனில் மொத்த நபர்களின் எண்ணிக்கை
  விடை 3

- எத்தனை வழிகளில் 12 பந்தை சமமாகப் பிரிக்கலாம்
  விடை 5 வழிகளில் (ஒன்று ஒன்றாக , இரண்டு இரண்டாக , மூன்று மூன்றாக நான்கு நான்காக ஐந்து ஐந்தாக)

- 100 குழந்தகளின் சராசரி வயது 10 வருடம் . அவர்களில் 25 பேர்களின் சராசரி வயது 8 வருடம் . மர்றொரு 65 பேர்களின் சராசரி வயது 11 வருடம் . மீதமுள்ள 10 குழந்தைகளின் சராசரி வயது

  100 குழந்தைகளின் வயதின் கூடுதல் = $100 \times 10 = 1000$
  25 குழந்தைகளின் வயதின் கூடுதல் = $25 \times 8 = 200$
  65 குழந்தைகளின் வயதின் கூடுதல் = $65 \times 11 = 715$
  மீதமுள்ள 10 குழந்தைகளின் வயதின் கூடுதல் = 1000 – ( 200 + 715 ) = 85
  சராசரி 85 / 10 = 8.5

R.SIVA M.Sc.,B.Ed ., 8015118094

TNPSC MATHS. R.SIVA M.Sc.,B.Ed., Cell : 8015118094 mail id : sivatvmalai@yahoo.co.in

- A , B , C , D ஆகியோரின் சராசரி வயது ஐந்து வருடங்களுக்கு முன் 45 ஆண்டுகள். A , B , C , D , $x$ ஆகியோரின் தற்போதைய சராசரி வயது 49 ஆண்டுகள் எனில் $x$ ன் தற்போதைய வயது என்ன ?

ஐந்து வருடங்களுக்கு முன் A , B , C , D
ஆகியோரின் வயதின் கூடுதல் $4 \times 45 = 180$
தற்போது A , B , C , D ஆகியோரின் வயதின் கூடுதல் = 180 + ( $4 \times 5$ )
= 180 + 20 = 200
***A , B , C , D*** , $x$ ஆகியோரின் தற்போதைய வயதின் கூடுதல் = $5 \times 49 = 245$
$x$ ன் வயது 245 – 200 = 45

- ஒரு சீருடைக்குத் தேவையான துணியின் அளவு $2\frac{1}{4}$ மீ எனில் $47\frac{1}{4}$ மீட்டர் துணியில் எத்தனை சீருடைகள் தைக்கலாம்

$47\frac{1}{4}$ மீட்டர் = 4700 + 25 = 4725 செ.மீ
$2\frac{1}{4}$ மீட்டர் = 2000 + 25 = 2025 செ.மீ
$\frac{4725}{2025} = 21$ சீருடைகள் தைக்கலாம்.

- இரு இடங்களுக்கு இடையே உள்ள தொலைவு $47\frac{1}{2}$ கி.மீ வேன் மணி $1\frac{3}{16}$ நேரத்தில் கடக்கிறது எனில் வேனின் வேகம் என்ன

$1\frac{3}{16} = \frac{(1 \times 16)+3}{16} = \frac{19}{16}$
$47\frac{1}{2} = \frac{(47 \times 2)+1}{2} = \frac{95}{2}$
$\frac{19}{16}$ மணியில் $\frac{95}{2}$ கி.மீ
1 மணியில் = $\frac{95}{2} \div \frac{19}{16} = \frac{95}{2} \times \frac{16}{19} = 5 \times 8 = 40$

- ஒரு இரு சக்கர வண்டி 1 லி பெட்ரோலில் 75.6 கி.மீ தூரத்தைக் கடக்கிறது . 10 லி பெட்ரோலில் அது எவ்வளவு தூரத்தைக் கடக்கும்

10 லி பெட்ரோலில் கடக்கும் தூரம் = $10 \times 75.6$ = 756 கி.மீ

- ஒரு வண்டி 2.4 லி பெட்ரோலில் 55.2 கி.மீ தூரத்தைக் கடக்கிறது 1லி பெட்ரோலில் எவ்வளவு தூரத்தைக் கடக்கும்

1 லி பெட்ரோலில் கடக்கும் தூரம் = $\frac{55.2}{2.4} = 23$ கிமீ

- ஒரே மாதிரியான 11 பைகளின் மொத்த எடை 115.5 கிகி எனில் 1 பையின் எடை என்ன

1 பையின் எடை= $\frac{115.5}{11} = 10.5$ கிகி

R.SIVA M.Sc.,B.Ed., 8015118094

TNPSC MATHS. R.SIVA M.Sc.,B.Ed., Cell : 8015118094 mail id : sivatvmalai@yahoo.co.in

- ஒரு புத்தகத்தின் விலை 40.25 எனில் 362.25 க்கு எத்தனை புத்தகங்க்கள் வாங்கலாம்

  $\frac{362.25}{40.25} = \frac{36225}{4025} = 9$

- ஒரு வாகன ஓட்டுனர் 3.2 மணி நேரத்தில் 135.04 கி.மீ தொலைவைக் கடக்கிறார் அவரின் வேகம் என்ன

  3.2 மணி நேரத்தில் = 135.04

  1 மணி நேரத்தில் = $\frac{135.04}{3.2} = 42.2$

- இரு எண்களின் பெருக்கல் 45.36 அவற்றுள் ஒரு எண் 3.15 மற்ற எண் யாது ?

  3.15 மற்ற எண் = 45 .36

  எண் = $\frac{45.36}{3.15} = 14.4$

- ஒரு வகுப்பில் உள்ள மாணவர்கள் ஒருவரும் விடுபடாமல் 6 அல்லது 8 பேர் கொண்ட குழுக்களாகப் பிரிக்க வேண்டும் . வகுப்பில் குறைந்த பட்சம் எத்தனை பேர் இருக்க வேண்டும்.

  குறைந்த பட்சம் என்பதால் மீச்சிறு பொது மடங்கு கருத்தைப் பயன்படுத்துக

  6 , 8 ன் மீச்சிறு பொது மடங்கு = 24

  வகுப்பில் குறைந்த பட்சம் 24 பேர் இருக்க வேண்டும்..

- 50மீ உயரத்தில் இருந்து போடப்பட்ட ஒரு ரப்பர் பந்து ஒவ்வொரு முறையும் தரையில் மோதிய பிறகு விழுந்த உயரத்தில் பாதி அளவிற்கு எழும்புகிறது எனில் பந்து ஓய்வு நிலைக்கு வரும்போது சென்ற தூரம்

  மேலிருந்து கீழ் = 50 மீ

  கீழிருந்து மேல் மற்றும் மேலிருந்து கீழ் 25 + 25 = 50 = 2 (25) மீ

  3 வது தடவை 25 ல் பாதி $2\left(\frac{25}{2}\right)$

  4 வது தடவை $\frac{25}{2}$ ல் பாதி $2\left(\frac{25}{4}\right)$




  ஓய்வு நிலைக்குச் செல்லும் போது தூரங்களின் கூடுதல்

  $= 50 + 2\left(25 + \frac{25}{2} + \frac{25}{4} + \ldots\ldots\ldots\right)$

  $= 50 + 2\left(\frac{25}{1-\frac{1}{2}}\right)$  S = $\frac{a}{1-r}$ a முதல் உறுப்பு , r = $\frac{1}{2}$

  = 50 + 2 ( 50 ) = 150 மீ

- அடுத்தடுத்த 3 எண்களின் கூடுதல் 90 எனில் அந்த எண்களைக் காண்

  அடுத்தடுத்த 3 எண்கள் $x, (x+1), (x+2)$ என்க

  $x + (x+1) + (x+2) = 90$

  $3x + 3 = 90$

  $3x = 90 - 3$

  $3x = 87$

R.SIVA M.Sc.,B.Ed., 8015118094

$x = \frac{87}{3} = 29$

$x + 1 = 29 + 1 = 30$

$x + 2 = 29 + 2 = 31$

விடை தேவையான எண்கள் ***29 , 30 , 31***

- இரு எண்களின் கூட்டல் பலன் 33 . ஒரு எண் 18 எனில் மற்றொரு எண் யாது
  தேவையான எண் $x$ என்க
  $x + 18 = 33$
  $x = 33 - 18 = 15$
  மற்றொரு எண் 15

- ஒரு எண்ணுடன் 12 ஐக் கூட்டக் கிடைப்பது 25 . அந்த எண் யாது
  தேவையான எண் $x$ என்க
  $x + 12 = 25$
  $x = 25 - 12 = 13$
  அந்த எண் ***13***
- ஒரு எண்ணிலிருந்து 60 ஐக் கழித்தால் 48 கிடைக்கும் அந்த எண் யாது
  தேவையான எண் $x$ என்க
  $x - 60 = 48$
  $x = 60 + 48 = 108$
- ஒரு எண்ணின் 5 மடங்கு 60 எனில் அந்த எண் யாது
  எண் $x$ என்க
  5 மடங்கு $5x$
  $5x = 60$
  $x = 60 / 5$
  $x = 12$

- ஒரு எண்ணின் 3 மடங்கிலிருந்து 6 ஐக் கழித்தால் 18 கிடைக்கும் அந்த எண் யாது
  தேவையான எண் என்க $x$
  எண்ணின் 3 மடங்கு $3x$
  எண்ணின் 3 மடங்கிலிருந்து 6 ஐ க் கழித்தால் கிடைப்பது 18
  $3x - 6 = 18$
  $3x = 18 + 6 = 24$
  $x = 24 / 3 = 8$
  தேவையான எண் ***8***

- அடுத்தடுத்த வரும் இரு எண்களின் கூடுதல் 75 . அந்த எண்கள் யாவை
  முதல் எண் $x$ அடுத்து வரும் எண் $x + 1$
  $x + ( x + 1 ) = 75$
  $2x + 1 = 75$
  $2x = 75 - 1 = 74$

R.SIVA M.Sc.,B.Ed ., 8015118094

$x = 37$

$x+1 = 37 + 1 = 38$

தேவையான எண்கள் 37 , 38

- ராமின் தந்தை அவனிடம் ரூ 70 கொடுத்தார் . இப்போது அவனிடம் ரூ 130 இருக்கிறது எனில் முதலில் அவனிடம் எவ்வளவு ரூபாய் இருந்தது
  முன்பிருந்த தொகை $x$ என்க
  $x + 70 = 130$
  $x = 130 - 70 = 60$
  முன்பிருந்த தொகை = 60

- 8 ஆண்டுகளுக்கு முன் என் வயது 27 . இப்போது என் வயது என்ன
  தற்போதைய வயது 27 + 8 = 35

- 65354 என்ற எண்ணில் 5 இன் இட மதிப்புகள் பெறும் மதிப்புகளின் வித்தியாசம் காண்
  65354
  1000 வது ஸ்தானத்தில் உள்ள 5 இன் இடமதிப்பு = 5000
  10 வது ஸ்தானத்தில் உள்ள 5 இன் இடமதிப்பு = 50
  வித்தியாசம் = 5000 – 50 = 4950

- 7 , 5 , 1, 8, 4 என்ற இலக்கங்களைப் பயன்படுத்தி மிகப்பெரிய ஐந்திலக்க எண்ணையும் , மிகச்சிறிய ஐந்திலக்க எண்ணையும் கண்டு அவற்றுக்கிடையேயான வித்தியாசம் காண் ( இலக்கங்களை ஒரு முறை மட்டும் பயன்படுத்துக )
  பெரிய எண் = 87541
  சிறிய எண் = 14578
  வித்தியாசம் = 72963

- ஒரு மாணவர் 468 என்ற எண்ணை 45 ஆல் பெருக்குவதற்கு பதில் 54 ஆல் பெருக்கி விட்டால் கிடைக்கப்பட்ட பெருக்கற்பலன் எவ்வளவு அதிகம்
  54 – 45 = 9
  பெருக்கற்பலனில் ஏற்பட்ட அதிகம் = 468 × 9 = 4212

- ஒருவர் ரூ 345 ஐ 25 காசுகளாக மாற்றுகிறார் . அவருக்கு எத்தனை 25 காசுகள் கிடைக்கும்
  1 ரூபாய்க்கு 4 25 பைசாக்கள்
  345 ரூபாய்க்கு = 345 × $4 = 1380$

- வகு எண் 15 ஈவு 4 மீதி 2 எனில் வகுபடும் எண் யாது
  வகுபடும் எண் = ( வகு எண் × ஈவு ) + மீதி = ( 15 × $4) + 2 = 60 + 2 = 62$
- 5 ஐத் தவிர 5 ல் முடியும் பகா எண்கள் ஒன்றும் இல்லை . அதாவது 5 ல் முடியும் பகா எண்கள் எண்ணிக்கை 1

- ஒரு வினாடி வினா நிகழ்ச்சியில் 50 வினாக்கள் ஒவ்வொருவரிடமும் கேட்கப்பட்டன . சரியான விடைக்கு 2 மதிப்பெண்கள் . தவறான விடைக்கு -1 மதிப்பெண் . விடையளிக்காமல் இருப்பின் 0 மதிப்பெண் . சலீம் 39 வினாக்களுக்கு

R.SIVA M.Sc.,B.Ed., 8015118094

சரியான விடையையும் 6 வினாக்களுக்கு தவறான விடையையும் மீதி வினாக்களுக்கு விடையளிக்கவில்லை எனில் சலீம் பெற்ற மதிப்பெண்கள் எவ்வளவு ?

மதிப்பெண் = $(39 \times 2) - 6(1) = 78 - 6 = 72$

- ஒருவர் 220 ஆடுகள் வைத்திருந்தார் . ஒவ்வொன்றையும் ரூ 650 வீதம் விற்றுக் கிடைத்த பணத்தில் பசுக்களை வாங்கினார் . ஒரு பசுவின் விலை ரூ 5800 எனில் அவர் எத்தனை பசுக்களை வாங்கி இருப்பார்.

ஆடுகள் விா்ற விலை = 220 × 650

வாங்கிய பசுக்கள் $\frac{220 \times 650}{5800} = 24$

மீதி ரூபாய் 38

- ஒரு குறிப்பிட்ட தேதியின் கிழமை கொடுக்கப்பட்டால் பின் கேட்கப்பட்டுள்ள தேதிக்கான கிழமையைக் காணலாம் . அவ்வாறு காண மொத்த நாட்களின் எண்ணிக்கையை முதலில் காண வேண்டும் . பின் அதனை 7 ஆல் வகுக்க வேண்டும்

2000 ஆண்டு ஜனவரி 6 வியாழக்கிழமை எனில் அதே ஆண்டு ஜூன் மாதம் 9 ஆம் தேதி என்ன கிழமை

| | |
|---|---|
| ஜனவரி | 26 ( 31 – 5 ) |
| பிப்ரவரி | 29 ( 2000 ஆனது லீப் ஆண்டு ) |
| மார்ச் | 31 |
| ஏப்ரல் | 30 |
| மே | 31 |
| ஜூன் | 8 |
| மொத்தம் | 155 |

155 ஐ 7 ஆல் வகுக்க ஈவு 22 மீதி 1

155 நாட்கள் = 22 வாரங்கள் + 1 நாள்

வியழன் தரப்பட்டது . அதற்கு அடுத்த கிழமை ( மீதி 1 என்பதால் ) வெள்ளி .

ஜூன் மாதம் 9 ஆம் தேதி வெள்ளி

R.SIVA M.Sc.,B.Ed., 8015118094